<u>**இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.**</u>

**ஐ.பி. எண்.10/2023**

இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் நாள் இன்று ம.சா.1ன் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. T. பிரவின்குமார் பி.ஏ.பி.எல்., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிசாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : சேமலையப்பன் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 04-08-2026 | மாவட்டம் | : ஈரோடு |

<u>**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

**1.** 1ம் எதிர்மனுதாரர் பேன்சி கடையும், மெடிக்கல் கடையும் வைத்து இருக்கிறார். பேன்சி கடையை 1ம் எதிர்மனுதாரரும், மெடிக்கல் கடையை அவரது கணவரும் பார்த்து வருகிறார்கள். நான் வருமான வரி எதுவும் செலுத்துவது இல்லை. கடந்த 25.01.2021 தேதியில் என்னிடம் ரூ.15,00,000/-ம் தொகை இருந்தது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியும். மேற்சொன்ன தொகையில் ரூ.5,00,000/-ம் நான் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன். வங்கி கணக்கு பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். 1ம் எதிர்மனுதாரர் உறவினர் மற்றும் தெரிந்த நபர் ஆவார்.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2026.08.04 17:45:24 +0530

**2.** ரூ.15,00,000/-ம் கடனுக்கு என்ன தேவை என்று நான் கேட்டேனா என்றால் தொழிலுக்கு தேவை என்று சொன்னார். கடன் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் நல்ல முறையில் தான் தொழில் செய்து வந்து இருந்தார். கடன் தேதியில் கடன் பெறவேண்டிய குடும்ப தேவை எதுவும் 1ம் எதிர்மனுதாரருக்கு இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. தொழில் அபிவிர்திக்காக தான் என்னிடம் கடன் கேட்டார். ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் என்ன காரணத்திற்காக கடன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் அதை சரியாக கவனிக்கவில்லை. கடன் தேதியில் கடன் வாங்க வேண்டிய அவசியம் எதுவும் 1ம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றாலும், நான் கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் 1ம் எதிர்மனுதாரருக்கு 3ம் நபர் என்றாலும், அறிமுகமானவரோ, உறவினரோ இல்லை என்றால் சரியல்ல.

**3.** 1ம் எதிர்மனுதாரர் கடன் பெற்றதாக, அவருக்கு எதிராக நிறைய வழக்குகள் இருக்கும் விவரம் எனக்கு தெரியும். நான் மனுவிற்கு பிறகு அவற்றை விசாரித்து தெரிந்து கொண்டேன். கடனுறுதி சீட்டில் எழுதியதும், சாட்சியுமாக உள்ள நபர்கள் என்னுடைய உறவினர்கள் இல்லை. அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. மேற்சொன்ன நபர்கள் யாரையும் நான் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. எனக்கு ரூ.15,00,000/-ம் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்றாலும், அவ்வாறு கடன் பெறவேண்டிய அவசியம் எதுவும் 1ம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் 3ம் நபர்களிடம் பெற்ற கடனுக்காக கொடுக்கப்பட்ட வெற்று கடனுறுதி சீட்டை

PRAVEEN KUMAR T
Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2026.08.04 17:45:30 +0530

பெற்று அதில் மோசடியாக தொகை, விவரங்கள் நிரப்பி என் பெயரில் பூர்த்தி செய்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என 1ம் எதிர்மனுதாரர் சந்தேகிக்கிறார் என்றால் சரியல்ல.

**4.** மனு சொத்து தவிர 1ம் எதிர்மனுதாரருக்கு வேறு வீடுகள், காலியிட பூமிகள் இருக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 12.11.2007 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் வடுகப்பட்டி கிராமத்திலும், கடந்த 27.01.2010 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் அறச்சலூர் கிராமத்திலும் வீட்டுமனை, வீடுகள் 1ம் எதிர்மனுதாரருக்கு இருக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் மேற்சொன்ன விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பற்றிய விவரம் எனக்கு தெரியும். என்னுடைய உண்மையானது என வைத்து கொண்டாலும், அதை தீர்க்க மனு சொத்தை தவிரவேறு சொத்து எதுவும் 1ம் எதிர்மனுதாரருக்கு இருக்கிறது என்றாலும், வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரரை அலைக்களிப்பதற்கு பொய்யாக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், கடனுறுதிசீட்டில் கண்ட எழுதியதும், சாட்சியான நபர்களும் சேர்ந்து கொண்டு, 1ம் எதிர்மனுதாரரிடம் பணம் பறிப்பதற்காக மோசடியாக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறோம் என்றால் சரியல்ல. ரூ.15,00,000/-ம் தொகை கேட்டு அசல் வழக்கு எதுவும் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் நொடிப்புநிலை செயல் எதுவும் செய்யவில்லை என்றாலும், எனவே என்னுடைய மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு போதிய வசதி இருப்பதை தெரிந்து கொண்டு நான் மோசடியாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2026.08.04 17:45:35 +0530

**(கற்றறிந்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியின் தொடர் குறுக்கு விசாரணைக்காக மனு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T
Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2026.08.04 17:45:41 +0530

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிபதி
ஈரோடு.